தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண் : 190.

# ததீசிப் புராணம்
# வினவிடைப் புராணம்



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூல்நிலையம்

1983 ] [விலை ரூ. 2—50

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண் : 190.

# ததீசிப் புராணம்
# வினா விடைப் புராணம்

பதிப்பாசிரியர் :

புலவர். வீ. சொக்கலிங்கம்,

தமிழ்த்துறை,

சரசுவதி மகால் நூல்நிலையம், தஞ்சாவூர்.



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூல் நிலையம்,**

**தஞ்சாவூர்.**

1983] [ விலை ரூ. 2—50

முதற் பதிப்பு : 1983.

*

வெளியீடு :

தஞ்சை சரசுவதி மகால் நூலக நிருவாகக்குழு,
தஞ்சாவூர்.

*

பதிப்பகம் :

தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலைய அச்சகம்,
தஞ்சாவூர்.

# வெளியிடுவோர் முகவுரை.

" கற்றதுகைம் மண்ணளவு கல்லாத(து) உலகளவென்(று)
உற்ற கலைமடந்தை ஓதுகின்றாள் "

என்பதனால் நம் கண்ணில் படாத எத்தனையோ நூல்கள் உள்ளன. கூடிய மட்டில், அவைகளை வெளியிடுவது என்ற உயர் நோக்குடையது. தஞ்சை சரசுவதி மகால். அவற்றுள், ஒரு சுவடியில் அமைந்துள்ளதுவே, இத்ததீசி புராணமும், வினாவிடைப் புராணமும் ஆம்.

சிறப்புடைய நூல்கள் ஒவ்வொன்றும், மக்கள் நல் வாழ்வு வாழத் துணைபுரியும் நீதிகளை எடுத்துரைப்பனவா கும். அதன்படி, ததீசி புராணம்,

" அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு "

என்ற குறட்பாவுக்கு இலக்கியமாகவும்,

" அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும் "

என்பதற்கும்,

" தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம் "

என்பதற்கும், இது முதலான பிற குறட்பாக்களுக்கும் இலக்கியமாக வினாவிடைப் புராணமும் அமைந்துள்ளன.

இப்புராணங்கட்கு முன்னதாக உள்ள 'வலைவீசு புராணம் 27—2—72ல் அச்சாகி வெளிவந்தும் அதனுடைய தொடர்ச்சி தற்போதுதான் வெளிவருகின்றது. சுவடி

எண். 279-ஐக்கொண்ட இப்புராணங்கள், ஒடிந்தும், பூச்சியரித்தும் உள்ள நிலையில் காட்சியளிக்கின்றன.

இதனை, ஆய்ந்து வெளியிடப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டு பதிப்பித்த, எமது மகால் தமிழாசிரியர் திருவாளர் புலவர் வீ. சொக்கலிங்கம் அவர்கட்கு எனது மனங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதனை அச்சேற்றப் பொருளுதவி செய்த மத்திய அரசுக்கும், அவ்வப்போது மேற்பார்வையிட்டு வந்த இம் மகால் நூலகரும், நிருவாக அதிகாரி அவர்கள் பொறுப்பும் கொண்ட திருவாளர் அ. பஞ்சநாதன், எம்.ஏ., பி.லிப்.சி., அவர்கட்கும், நன்முறையில் அச்சிட்டுத்தந்த, எமது மகால் அச்சகத்தாருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்,

**ச. மெய்கண்ட தேவன்,** இ. ஆ. ப.,

மாவட்ட ஆட்சியர் & இயக்குநர்

சரசுவதி மகால் நூலக நிருவாகக்குழு

தஞ்சாவூர்,
9—7—83.

# பொருளடக்கம்


பக்கம்

1. பதிப்பாசிரியர் முன்னுரை ... 1—16

2. ததிசிப்புராணம் ... ... 17—26

3. விறைவிடைப்புராணம் ... ... 27—36

4. பின்னிணைப்பு ... ... ... 37—46

5. பாட்டு முதற்குறிப்பகராதி ... 47—48

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னேர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள், பல்வேறு இடங்களில் உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் எம்மிடம் அன்பளிப்பாகக் கொடுத்துதவினல், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

எம்மிடம் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, எமது சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாக வருமாயின், சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் 5 பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளை, எமது மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேம்.

இங்ஙனம்,

**ச. மெய்கண்ட தேவன்,** I. A. S.,

*மாவட்ட ஆட்சியர் & இயக்குநர்,*

*நிர்வாகக் குழு, சரசுவதி மகால் நூலகம்.*

*தஞ்சாவூர்,*

*7—6—83.*

தமிழ் வாழ்க!

# பதிப்பாசிரியர் முன்னுரை

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

என்ற திருமறைக்கேற்ற இலக்கணமுடையவர், 'ததீசி' முனிவர். இவர்தம் வரலாறு கூறுவதே இந்நூலாகும்.

இந்நூல், எமது மகால் தமிழ்ச்சுவடி எண். 279-ல் b பகுதியாகும். இதன் a பகுதியாகிய 'சரபபுராணம்' எமது சரசுவதி மகால் வெளியீடாக கி. பி. 1972-ல் வெளிவந்து விற்பனையாகி வருகின்றது. இதன் b பகுதியாகிய ததீசி புராணமும், c பகுதியாகிய விளைவிடைப் புராணமும் தற்போது வெளிவருகின்றது.

இம்மூன்று பகுதிகளையும் இயற்றியவர் பெயர் தெரியவில்லையாயினும், இந்நூலின் கடைசியில், "சிதம்பர புராணமருளிச்செய்த 'திருமலை நாயனா' ரருளிச் செய்த சிவ புராணத்தில் விளைவிடைப்புராணம் முற்றும்" என்றுளதைக் கொண்டு, எமது மகால் முன்னைநாள் தமிழ்த்துறைத் தலைவர் (காலஞ்சென்ற) திரு. L. உலகநாதபிள்ளை அவர்கள்: "இவ்வாக்கியத்தை ஆராயுமிடத்து மேற்கண்ட மூன்று புராணங்களும், சிவ புராணத்தினைச் சேர்ந்தவை என்றும், இயற்றியவர் திருமலை நாயனார் என்றும் உய்த்துணரக் கிடத்தல் காண்க" எனக் கூறிப்போந்தார். இதனால், இதனை இயற்றியவர் 'திருமலை நாயனார்' என்று ஒருவாறு கொள்ளலாம்.

அவ்வாறு கொண்டால், 'புராணத் திருமலை நாதரின்' வேறுபட்டவர் எனக்கொள்ள இடமிருக்கின்றது. புராணத் திருமலைநாதர், காஞ்சி ஞானப்பிரகாச மடத்தைச் சார்ந்து, சமய தீக்கை பெற்றவர். 16-ம் நூற்றுண்டினர். தில்லை மூவாயிரவர் வேண்டுகோளின்படி, சிதம்பரபுராணத்தினை வடமொழியினின்றும் தமிழிற்பாடியதோடல்லாமல், திருவாலவாயுடைந்து, சோமசுந்தரக் கடவுளின் அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் 516 கண்ணிகளில் அமைத்துச் 'சொக்கநாதர் உலா' என்னும் நூலையும் பாடியவர். எனவே, ததீசி புராண, வினவிடைப்புராண நூலாசிரியர், சிவபுராணம் செய்ததாக அறியக்கூடவில்லை. ஆகவேதான், இவைகளின் நூலாசிரியர் இன்னாரெனத் துணிந்து கூற இடமில்லை.

"திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநாம் அறியவோர் அந்தணனாய்
ஆண்டுகொண்டான்
ஒருநாமம் ஓருருவம் ஒன்றும் இல்லார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ"

என்பது மாணிக்கவாசகப் பெரியார் வாக்கு. இதில், முகுந்தனும், பூவனும் பேயனது அடிமுடி காண்பான் வேண்டி, முறையே ஏனமும், அன்னமுமாக உருக்கொண்டு சென்று, காணமுடியாது, தோல்வியுற்றுத் திரும்பிய பழமையான வரலாறு பேசப்படுகிறது. இதுபோன்ற பழமையான வரலாறுகளைக் கூறுவது 'புராணம்' எனப்படும்.

இரணியனைக் கொல்லத் திருமால் எடுத்த நரசிம்ம வடிவத்தினைச் சிவபெருமான், சரபவடிவெடுத்து, அழித்த பழமையான வரலாற்றினைக் கூறுவது 'சரப புராணம்' இது, முன்பே,எமது வெளியீடாக வெளிவந்தது. தற்போது, 'என்பும் உரியர் பிறர்க்கு' என்ற நீதியினை எடுத்தியம்ப எழுந்த, ததீசியின் பழமையான வரலாறு, 'ததீசி புராணம்' என்றும், சிவபெருமானது அருஞ்செயல்கள் மூலம், அநேக

நீதிகளை எடுத்தியம்பும் பழமையான வரலாறுகளைத் தன்னகத்தே கொண்டது, 'வினுவிடைப்புராணம்' என்றும் வெளிவருகின்றது.

## ததீசி முனிவர் வரலாறு

ததீசி முனிவர், 'அதர்வர்' என்பாருக்கும், 'சாந்தி' அம்மையாருக்கும் மகவாய்த் தோன்றியவர். நல்ல சிவ பக்தர். சிறந்த தவவலிமையை யடைந்தார். சிவபெரு மானை வழிபட்டு, அழியாச் சிறப்புடைய, வச்சிர யாக்கை யைப் பெற்றூர்.

தக்கன், சிவபெருமானை மதியாது வேள்வி செய்த போது, அவனுக்குப்பல அறிவுரைகள் கூறி, சிவபராக்கிரமங் களை எடுத்துக் கூறியும் கேளாததால், அவனது வேள்வி அழியச் சாபமிட்டார்.

முன்னொரு காலத்தில், அமுதம் வேண்டிப் பாற்கடல் கடைய நேரிட்டபோது, தேவர்களூர் அசுரர்களும், தங்கள் தங்கள் ஆயுதங்களைத் ததீசி முனிவரிடம் தந்துவிட்டுப் பாற்கடல் கடையச்சென்றனர். பின்னர் அமுதம் கிடைத்த மகிழ்ச்சியால், படைக்கலன்களைத் திரும்பப் பெறுது சென்று விட்டனர். அவற்றையெல்லாம் ததீசி முனிவர், தனது தவ வலிமையால் விழுங்கிவிட்டார். அக்கருவிகள் யாவும், அவரது என்போடியைந்துவிட்டன. சிறப்பாக, முது கெலும்புடன் ஒன்றிவிட்டன.

பன்னுட்களுக்குப்பின், தேவேந்திரனுக்கும் விருத்திரா சுரனுக்கும் போர் மூண்டது. அப்போரில் இந்திரனது வச்சிரப்படை பயன்படவில்லை. எனவே ததீசிமுனிபுங்க வரை வேண்டினுன். ததீசியும் அவனது வேண்டுகோளுக் கிணங்கி, தனது தவ வலிமையினுல், தனது வலிமை பொருந்திய முதுகெலும்பைக் கொடுத்து, "அன்புடை யார் என்பும் உரியர் பிறர்க்கு" என்ற பொய்யா மொழியை மெய்ப்பித்தார்.

முதுகெலும்பினைப் பெற்று, அதனால் வெள்ளை வாரணன், விருத்திராசுரனைக் கொன்று, வெற்றி பெற்றான். ததீசி முனிப் பெருந்தகையும், தனது தவத்தின் வலிமை கொண்டு, தன்னுயிரைப் போக்கிக்கொண்டார்.

## ததீசி புராணம்

மேற்கூறிய வரலாறு இந்நூலில் இல்லை. இதிற் காணப்படுவது :

'நான்முகனுடைய தும்மலில் வந்து தோன்றின 'குதன்' இந்திரனிடம் வச்சிராயுதம் பெற்றுப் பூமியை ஆண்டுவரும் நாளில், ததீசி முனிவரிடம் நட்புக் கொண்டிருந்தான்.

ஒருநாள், இருவரும் உரையாடல் செய்யும்போது, 'உலகில் முதன்மையுற்றவர் யார்?' என்று குதன் கேட்க, அதற்குத் ததீசி முனிவர், 'தவத்தோர்கள்' என்று கூறக் கோபங்கொண்ட குதன், 'மன்னர்கள் தான்' என்றான்.

ததீசி, பிருகு முனிவரின் சாபத்தால், திருமால் பத்துப் பிறவிகள் எடுத்தது முதலான முனிவர்கள் பெருமையை எடுத்துரைத்தும் கேளாமல், குதன், அவருடன் போரிட்டு வச்சிரப்படையால் அவரைக் கொன்றான். அவர் இறக்கும்போது, வெள்ளியை (சுக்கிரனை) நினைத்தார்.

உடனே, வெள்ளி வந்து, சிவபெருமானருளால் பெற்ற 'மிருத சஞ்சீவினி' என்னும் மந்திரத்தால் ததீசியை எழுப்பினார். வெள்ளியின் உபதேசத்தால், ததீசி, சிவபெருமானை நோக்கித் தவம்புரிந்து, வச்சிர உடல் பெற்றுவந்து, குதனை உதைத்தார். தனது வச்சிரப்படை பயன்படாதது கண்ட குதன், அவ்வாறே தானும் தவமியற்றத் துணிந்தான்.

ஆனால், சிவனை வேண்டாது, திருமாலைக் குறித்துக் குதன் தவமியற்றினான், திருமால், ததீசியை எதிர்த்தார்.

அதனை அறிந்த ததீசி, 'ஆயிரம் நாரணர் வரினும் அஞ்சேன்' என்று கூற, திருமால், நெடுமால் வாயுவைத் தொடுத்தார். ததீசி, அவ்வுருக் குலையச் சாபமிட்டார். தோல்வியுற்ற திருமால், தேவர்களோடு சேர்ந்து ததீசியுடன் போரிட்டார். ததீசி, சிவனருளால் ஒரு கட்டு தருப்பைப் புல்லினை எடுத்து, ஒவ்வொன்றையும் ஆயுதமாக்கி எவினார். அதனால், திருமால் தோல்வியுற்றார்.

வெற்றிபெற்ற ததீசி, திருமாலின் மார்பில், தனது இடது காலால் உதைத்தார். தனது சிறுமையால் தோல்வியுற்ற திருமால், ததீசியைப் பணிந்து, பாற்கடலடைந்து, ததீசியால் தனது மார்பில் ஏற்பட்ட வடுவின்மேல் திருமகளை வைத்து இனிதிருந்தார்' என்பதாம். நாற்பத்தெட்டு செய்யுட்களைக் கொண்டது.

ததீசி முனிவர், பிருகு முனிவரைக் குறிப்பிடுகின்றார். அதுபற்றிய செய்தியாவது :—

ஒருசமயம் பிருகுமுனிவர் சிவபெருமானைத் தரிசிக்கக் கைலை சென்றார். அவர் தரிசனங் கொடாமையால் கோபங் கொண்டு, அவரை, இலிங்க உருவாகும்படிச் சபித்தார். பின்னர், பிரமனைக் காண, பிரம்மலோகம் சென்றார். பிரமன், இவரது வரவைக்கண்டு மதிக்கவில்லை. அதனால் கோபங்கொண்ட பிருகு, 'உலகத்திலே உனக்குக் கோயிலும் பூசையும் இல்லாது ஒழிக' என்று சபித்தார். பிறகு, பிருகு, திருமால் இருப்பிடமாம் வைகுந்தஞ் சென்றார். அப்போது, அவர் துயில் கொண்டிருந்தார். அருகில் சென்று, காலால் உதைத்தார். கண்விழித்த திருமால், அவர் காலைப்பற்றிக் கொண்டு, கோபங்கொள்ளாது, 'உமது திருவடி என்மேல் பட, என்ன மாதவஞ் செய்தேனோ யான்' என்று துதித்து உபசரிக்க, மகிழ்ந்த பிருகு, 'நீரே யாவராலும் பூசிக்கத்தக்க கடவுளாவீர்' என்று வாழ்த்திச் சென்றார்.

ததீசி முனிவர், பிருகு முனிவர் முதலானவர்களுடைய பிறநூல் வரலாறுகளிற் சில, பின்னர் இணைத்துள்ளேன். பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற்புராணத்து, இந்திரன் பழிதீர்த்த படலத்துக் காணப்படும் ததீசி வரலாறு, அபிதான சிந்தாமணி கூறும் ததீசி வரலாறு, மற்றும், தீர்த்தகிரிப் புராணம், கந்தபுராணம் கும்பகோணப் புராணம் முதலானவற்றிலிருந்தும் வரலாறுகள் தரப்பட்டுள்ளன. இப்புராணத்தில், 'குதன்' என்றும், கந்தபுராணத்தில், 'குபன்' என்றும் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறே, பிருகு முனிவர் வரலாறும் சில நூல்களிலிருந்து ஒப்புமை காட்டப்பட்டுள்ளது.

## விஞவிடைப் புராண வரலாறு

சிவபெருமான் அணிந்துள்ள ஆடை, அணிகலன் முதலானவைகளைக் குறித்து வினவிய அகத்திய மாமுனிவருக்கு, முருகக்கடவுள் கூறிய விடையாகும் இது. இதன்மூலம், சிவபெருமானுடைய செயற்கருஞ் செயல்களைச் சுருக்கமாக நாற்பத்துநான்கு செய்யுட்களில் கூறுகின்றது.

**இதன்கண் வரும் வினக்களாவன :**

1. கைலையங்கிரி யிருக்கையில், கயிலையில் நடமிட்டதேன் ?

2. கொன்றைமாலை முதலானவைகள் இருக்கத் தலையோடுகளை மாலையாக அணிந்ததேன்?

3. சந்தனம் முதலான மணப்பூச்சுக்களிருக்க, விபூதி யணிந்ததேன்?

4. யாவராலும் காண்டற்கரியவன், திருநடனம் செய்தது ஏன்?

5. தேர் முதலானவைகளிருக்க, எருதினைக் கொண்டதேன்?

6. பீதாம்பரம் முதலான உயர்ந்த ஆடைகளிருக்க, யானைத் தோலையும், சிங்கத்தோலையும், புலித்தோலையும் அணிந்ததேன்?

7. வில் முதலான படைகளிருக்க, மானைக்கொண்டது ஏன்?

8. இரத்தின பீடமில்லாமல், முயலகன் முதுகின்மே லூன்றியது ஏன்?

9. தேவர்கள் இருக்கப் பூதம், பேய்களைத் தன் படைகளாய்க் கொண்டதேன்?

10. வீரக்கழல்களிருக்கச் சிலம்பணிந்ததேன்?

11. வாசமான வகைகள் இருந்திடச் செங்கையில் அனலேந்தியது ஏன்?

12. பொன்னாபரண மிருக்கப் பன்றியின் பல்லணிந்தது ஏன்?

13. செம்பொன் மதாணியிருக்க, ஆமையோட்டினைத் தரித்தது ஏன்?

இவைகட்கு விடைகள் :—

**1. சுடலை கொண்டது :**

எல்லோருடைய உடல்களும் வெந்தழியும் இடம் சுடலையாதலின், அதனைச் சிறப்பிடமாகக் கொண்டார்.

**2. தலைமாலையணிந்தது :**

தேவர்கள் தொகுதி வெந்தழிந்த பின்னர், அவர்களது மண்டையோடு, எலும்பு இவைகளை மாலையாகத் தரித்தார்.

### 3. விபூதியணிந்தது :

களங்கமற்ற தன்மையைக் காட்டவேண்டியும், தன்னுடைய அடையாளத்தினைத் தன் அடியார்கள் மதிக்க வேண்டுமென்ற எண்ணத்தாலும், அண்டபகிரண்டமெலாம் வெந்த சுடலையின் நீறு அணிந்தார். மேலும், கொடிய வினைகளையெல்லாம் நீறுக்குதலால் 'நீறு' என்றும், தூய நெறியினைத் தருதலால் 'பூதி' என்றும், மலவிருளை அகற்றித் துளக்குதலால் 'துளக்கம்' என்றும், எழுபவத்தையு மொழித்தலால் 'ஆக்கை' என்றும் அதற்குப் பெயர்.

### 4. நடனம் ஆடியது :

அண்டத்திரள்கள் யாவும் அழிந்துபட்டபோது, தனது சுதந்திர உண்மை குறித்து, மகிழ்ச்சி நடனம் புரிந்தார்.

### 5. எருதேறியது :

யுகாந்த காலங்களில், அழிக்கும் தொழிலை மேற்கொண்டபோது, தருமம் அழியாதிருக்க, அதனை விடையாகக் கொண்டார். மேலும், இறைவன் திரிபுரமெரித்தபோது, இரதத்தில் பூட்டியிருந்த வேதக் குதிரைகள் இளைத்தலைக்கண்ட திருமால், 'தரும விடை' உருவம் கொண்டு தாங்கினார். அதுவே இடபமாக இன்றும் காணப்படுகின்றது.

### 6. யானைத்தோல் போர்த்தது :

'கயாசுரன்' என்னுமோர் அசுரன், யானை வடிவங்கொண்டு, வானவர்கட்குத் தொல்லை தந்தான். தேவர்கள், சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவபெருமான், வீரவேடந்தாங்கி, அதனைக்கொன்று அதன் தோலைப் போர்த்தார்.

### சிங்கத்தோல் போர்த்தது :

படைக்கலன்கள் முதலானவற்றால் இறவாத வரம்பெற்ற இரணியனைத் திருமால், நரசிங்க வடிவங்கொண்டு,

கொன்றதோடமையாமல், தேவர்களையும், அகிலத்தவர்களையும் அழிக்கத் தலைப்பட்டார். தேவர்கள், சிவனிடம் முறையிடச் சிவபெருமான், 'சரப' வடிவந்தாங்கி, அந்நர சிம்மத்தை அடக்கி, அதன் தோலைப் போர்த்தார். மண்டையோட்டினைத் தலைமாலையின் நடுவண் வைத்தணிந்து கொண்டார்.

### புலித்தோல் போர்த்தது :

தாருகாவன முனிவர்களின் நிலையறிய (தூர்த்த) பிட்சாடன வடிவெடுத்துச் செல்ல, இருடியர் துணைவியர் கண்டு மயல் கொள்ள, கோபித்த முனிவர்கள், தீங்கேவு (ஆபிசார) வேள்வி செய்து, அதிற்பிறந்த புலியைச் சிவன் மீது ஏவினர். அதனைச் சிவபெருமான் கொன்று அதன் தோலை உடுத்திக்கொண்டார்.

### 7. மானைத் தரித்தது :

தாருகாவன இருடியர் ஏவிய மானைத் தரித்தார்.

### 8. முயலகன்மேல் ஊன்றியது :

தாருகாவனத் திருடியர், சிவனைக் கொல்ல ஏவிய முயலகனை மிதித்து நடனமிட்டார்.

### 9. பூதம், பேய்களைப் படையாய்க் கொண்டது :

இவைகளும், தாருகாவனத் திருடியர் ஏவியவை. அவைகளைப் படையாய்க் கொண்டார்.

### 10. சிலம்பணிந்தது :

இதுவும் அவர்கள் அனுப்பிய மந்திரங்கள். அதனைச் சிலம்பாயணிந்தார்.

### 11. அனலேந்தியது :

இருடியர்கள் அனுப்பியதும் இதுவே.

## 12. பன்றியின் பல்லணிந்தது :

இரணியாட்சனெனும் ஏமக்கண்ணன், விண்ணுலகை அழித்து, மண்ணுலகைச் சுருட்டிக்கொண்டு போய்ப் பாதாள உலகில் ஒளிந்திருந்தான். திருமால், 'பன்றி' உருக்கொண்டு, பாதலம் சென்று, அவனை மாய்த்துப் பூமியைத் தன்னிரு பற்களினால் சுமந்துவந்து நின்றார். அவ்வாறு செய்த தருக்கினால் ஆங்காரம் மேலிடச் சிவ பெருமான், அதனை வதைத்து, அதன் பற்களை அணிந்தார்.

## 13. ஆமையோடணிந்தது :

பாற்கடல் கடைந்தபோது, திருமால் ஆமை வடிவு கொண்டு மந்தர மலையைத் தாங்கினார். அமுதம் அடைந்த பின்னர், அவ்வாறு தான் காரணமாயிருந்த தருக்கினால், உலகுக்குத் தொல்லை தந்த அகங்காரம் அழியச் சிவபிரான் அதனை அழித்து, அதன் ஓட்டினை அணிகலனாக அணிந்தார்.

இவ்வளவே, இவ்வினாவிடைப் புராணத்துக் கூறப் படுவன. ஆலவாய்ச் சொக்கலிங்கம், மதுரையில் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப் புரிந்தார். அரும்பிட்டுப் பச்சிலையிட்டு ஆட்செய்யும் அன்னையவள், தரும் பிட்டு பிட்டுண்ண, அவளது தலையன்பிற் கட்டுண்டு, மண்சுமந்த அண்ணல், அரிமர்த்தன பாண்டியனால் மொத்துண்டு புண் சுமந்தார். அலகிலா விளையாட்டுடைய பரமன், திருத் தொண்டர் பொருட்டுப் பல அருஞ்செயல்களைச் செய்தார். பெரியபுராணத்துக் கூறப்படும் இறைத்திறம், வியக்கத் தக்கது. ஆளுடைய பிள்ளையார் முதலான சமய குரவர் கள் நால்வர்க்குமேயன்றி, ஏலையோருக்கும் அருள்பாலித் தார். கண்ணப்பரின் அன்பைச் சோதித்தார். திருநீல கண்டரின் உறுதியைக்கண்டு வியந்தார். சிறுத்தொண்ட ரின் குறிக்கோளை உலகுக்கு அறிவித்தார். இவ்வாறாக நல்லவர்களுக்குத் திருவருள் புரிந்தவர், தீயவர்களை அழித் தும் வருகின்ற திறன் போற்றத்தக்கது.

தேவராயினும், மூவராயினும், தாம்செய்த அருஞ்செயலால் அகந்தை கொள்ளலாகாது என்ற நீதியை எடுத்தியம்ப எழுந்ததே, 'சரப புராணம்'. அதில், திருமால் எடுத்த வடிவாகிய நரசிங்கத்தை அழித்து, அதன் தோலைப் போர்த்தது கூறப்பட்டது. இதில், மேலும், வைகுந்தன், கூர்ம, வராக வடிவெடுத்து நன்மை புரிந்ததால் கொண்ட அகந்தையைச் சிவன் அடக்கி, ஆமை ஓட்டையும், பன்றியின் பற்களையும் அணிந்த வரலாறுகள் பேசப்படுகின்றன. அகந்தையை அடக்க, எடுத்த வடிவினைக் குலைத்தாரே தவிர திருமாலைச் 'சிவன்' எனும் கருணைக்கடல், அழித்ததாகக் கருத்தல்ல. திருமால், நரவரியுருக்கொண்டது, விட்டுணு புராணம், இலிங்கபுராணம் முதலான நூல்களில் காணப் படுகின்றது. விட்டுணுபுராணம் முதன் முதலில் மைத்திரேயர் வணங்கிக்கேட்ப, பராசர முனிவரால் திருவாய்மலர்ந்தருளப்பட்டது. மச்சாவதாரம் முதலான பத்து அவதாரங்களின் மேன்மையும், மற்றைய சிறப்புக்களும் விட்டுணு புராணத்துள் கூறப்பட்டுள்ளன.

இலிங்கபுராணம், பதினெண் புராணங்களில் ஒன்று. வியாச முனிவரால் அருளிச் செய்யப்பட்டது. சரபாவதாரத்தின் மேன்மையினைப் பிரம்மதேவன் கலைமகளிடம் கூறியதாகத் தொண்ணூற்றுருவது அத்தியாயங் கூறு நிற்கும். இலிங்கபுராணம், பதினோராயிரங் கிரந்தங்களைக் கொண்டு, வடமொழியில் விளங்கியதனைத் தமிழில், வரதுங்கராம பாண்டியனார் மொழிபெயர்த்துள்ளார்.

இம்மகாலில், முன்னமே அச்சான சரபபுராணத்தைத் தொடர்ந்து, ததீசி புராணமும், வினாவிடைப்புராணமும் உள்ளன.

இம்மூன்று புராணங்களையும், திருமுனிவன் சூத பகவானைக் கேட்க, அருளியதாகப் (சரப புராணம் 11-ம் பாடலில்) பேசப்படுகின்றது. நத்திதேவர்பால், சனத்குமாரர் கேட்டு, வியாச முனிவருக்குச் சொல்ல, அவரிடம்

இருந்து சூத முனிவர் கேட்டுத் திருமுனிக்கருளியதாகக் கூறப்படுகிறது. அப்படிச் சொன்னதை, மதுரையிலுள்ள திருத்தொண்டர்கள் வேண்ட, வடமொழியிலிருந்து தமிழில் கூறப்பட்டதாகத் தெரிகின்றது. சரப புராணத்தினைத் தொடர்ந்து, தநீசி புராணமும், அதைத்தொடர்ந்து வினாவிடைப் புராணமும் இச்சுவடியில் கூறப்பட்டுள்ளன.

'வாயு புராணம்', 'பண்டு தொட்டு இன்றுவரை பரவி இருக்கிறது எதுவோ, அதுவே 'புராணம்' எனப்படும்' என்று கூறுகின்றது. கௌடில்யர், தமது அர்த்த சாத்திரத்தில், 'அரசர்கள் அரசகுமாரர்கள் கற்கவேண்டிய நூல்களில் புராணமும் ஒன்று' என்று கூறியுள்ளார். "ஆயகலைகள் அறுபத்து நான்கில் ஒன்று, 'புராணம்'. அது, உலகத் தோற்றம், ஒடுக்கம், மனுவந்தரம், முனிவர் மரபும் வரலாறும், அரசர் மரபும் வரலாறும் ஆகிய ஐந்திலக்கணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்," என்பார் பண்டை நிகண்டாசிரியர்கள்.

புராணங்களை, மகாபுராணங்கள் பதினெட்டு என்றும் உபபுராணங்கள் பதினெட்டு என்றும் அதிபுராணங்கள் பதினெட்டு என்றும் மூவகையாகப் பிரிப்பர். அவை யாவன:—

**மகாபுராணங்கள் :**

1. ஆக்கிநேய புராணம்
2. இலிங்க புராணம்
3. ஸ்காந்த புராணம்
4. காருட புராணம்
5. கூர்ம புராணம்
6. சைவ புராணம்
7. நாரதீய புராணம்
8. பதும புராணம்
9. பவிஷ்ய புராணம்
10. பாகவத புராணம்
11. பிரம்ம புராணம்
12. பிரம்ம வைவர்த்த புராணம்
13. மச்ச புராணம்
14. மார்க்கண்டேய புராண
15. வராக புராணம்
16. வாமன புராணம்
17. வாயு புராணம்
18. விஷ்ணு புராணம்

உபபுராணங்கள் :

1. அவுசன புராணம்
2. கபில புராணம்
3. காந்த புராணம்
4. காளிக புராணம்
5. சனத்குமார புராணம்
6. சாம்பேச புராணம்
7. சிவதரும புராணம்
8. சௌர புராணம்
9. துருவாச புராணம்
10. நந்தி புராணம்
11. நாரசிங்க புராணம்
12. நாரத புராணம்
13. பராசர புராணம்
14. பிரமாண்ட புராணம்
15. மகேசுவர புராணம்
16. மாரீச புராணம்
17. மானவ புராணம்
18. வருண புராணம்

அதிபுராணங்கள் :

1. ஆதிக புராணம்
2. இலக்குமி புராணம்
3. கர்க்க புராணம்
4. கல்கி புராணம்
5. சண்டி புராணம்
6. சிவோத்தர தரும புராணம்
7. தேவி சரித விரிவுப் புராணம்
8. பசுபதி புராணம்
9. பரானந்த புராணம்
10. பவிஷ்யோத்தர புராணம்
11. பார்க்கவ புராணம்
12. பிருகத் தர்ம புராணம்
13. பிருகத் வாமன புராணம்
14. பிருகத் மாத்ஸ்ய புராணம்
15. பிருகத் நாரதீய புராணம்
16. மகா பாகவத புராணம்
17. முத்கல புராணம்
18. வசிட்ட புராணம்

• மகா புராணங்களாகிய பதினெண் புராணங்களுள், இலிங்கம், ஸ்காந்தம், கூர்மம், சைவம், பவிஷ்யம், பிரமாண்டம், மச்சம், மார்க்கண்டேயம், வராகம், வாமனம் ஆகிய பத்தும் சிவபெருமான் பெருமையினைக் கூறும் சைவ புராணங்களாம். காருடம், நாரதீயம், பாகவதம், விஷ்ணு ஆகிய நான்கும், திருமால் பெருமையினைக் கூறும், வைணவ புராணங்களாம். பதுமம், பிரமம் ஆகிய இரண்டும், பிரம்மாவின் பெருமையினைக் கூறுவன. பிரம வைவர்த்தம் சூரியனது பெருமையினையும், ஆக்கினேயம் அக்கினியினுடைய பெருமையினையும் கூறுவன.

பதினெட்டு உபபுராணங்களும் சிறப்புடையன. மகா புராணங்களுக்கு உதவியாக இருப்பதால் 'உப புராணம்' எனப் பெயர் பெற்றது. இவற்றுள் சில வியாசரால் இயற்றப்பட்டவை.

அதி புராணங்கள் பதினெட்டுடன், 'விநாயகர் சரித விரிவு' என்பதனையும், 'கிருஷ்ணவதாரக் கதை' என்பதனையும் சேர்த்துக் கூறுவோரும் உளர்.

மேலும், புராணங்கள் பல வகைப்படும். இலக்கண புராணம், சைவ புராணம், வைணவ புராணம், சைன புராணம், மகம்மதிய புராணம், கிறித்தவ புராணம், பெரியார்கள் புராணம், புலவர்கள் புராணம், தலைவர்கள் புராணம், அரசர்கள் புராணம், நிலம், நீர், தீ, வளி, வான் ஆகிய ஐந்து பூதங்களையும் பற்றிக்கூறும் புராணம், மற்றும் பல.

இலக்கணத்தினைச் சூத்திர வெண்பாவால் விளக்கிக் கூறுவது, 'மாபுராணம்'. சிவபெருமானது பெருமையினை உணர்த்துவதில் தலைசிறந்தவை, 'திருத்தொண்டர் புராணம்' எனும் 'திருப்புராணம்', 'திருவிளையாடற் புராணம்' முதலியன. விநாயகரைப்பற்றிக் கூறுவது 'விநாயக புராணம்'. முருகவேளின் மெய்க் கீர்த்தியினைக் கூறுவது 'கந்த புராணம்'. திருமாலின் பெருமை கூறுவது

'பாகவதம்'. சைவர்கட்கு இன்றியமையாப் புராணமாக விளங்குவது 'ஆதிபுராணம்' என்னும் 'ஸ்ரீபுராணம்'. 'மேரு மந்தர புராணம்' அபண்புராணம். நபிகள் நாயகத் தின் வரலாற்றினைக் குறிக்கும் மகர்மதிய புராணங்கள் 'சிறுப்புராணம்', 'முசையதீன் புராணம்' முதலியன. கிறித்தவ புராணம், 'தேம்பாவணி'. பெரியார்களின் புகழைக் கூறும் புராணங்கள், 'சேக்கிழார் புராணம்'. 'வாதவூரடிகள் புராணம்', 'பட்டினத்துப் பிள்ளையார் புராணம்' முதலியன. புலவர்களின் புகழைக் கூறுவது 'புலவர் புராணம்'. தலைவரைப் பற்றிக்கூறும் புராணம் 'காந்திப் புராணம்'. அரசன் பெயரால் விளங்குவன, தேரூர்ந்த சோழ புராணம் முதலியன. நிலத்தைப்பற்றிக் கூறும் புராணங்கள், தலபுராணம் எனப்படும் திருவை யாற்றுப் புராணம் முதலியன. இவை எண்ணிறந்தன. இவைகளுள் பல தல புராணங்களை இயற்றியவர் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் ஆவார்கள்.

மிகவும் முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்ட இச்சுவடி யின் முதற்பகுதி 'சரப புராணம்' முன்பே 27—2—72-ல் வெளியானது. ஒடிந்தும், சிதைந்தும் உள்ளதால், மேலும் முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்ட இச்சுவடியின்கண் உள்ள பிழைகளை நோக்கும்போது, இது மூலத்தின் 'படி'யே என்று விளங்குகின்றது. மூலச்சுவடி கிடைக்குமாயின் இந் நூல், மேலும் பரிமளிக்கும். கூடியமட்டில், கெட்டுப்போன இடங்களை, அடைப்புக் குறிகளிட்டு நிறைவு செய்துள்ளேன்.

அண்மையில், இதனை, ஆய்ந்து வெளியிட அனுமதி யளித்த, எமது மகால், பதிவுக்குழு இயக்குநர் பொறுப்பும், உறுப்பினரும் ஆகிய, மாவட்ட ஆட்சியர், தமிழ்த்திரு. **ச. மெய்கண்டதேவன்,** இ. ஆ. ப., அவர்கட்கும், இம் மகால் நூலகரும், நிருவாக அதிகாரிப் பொறுப்பும் கொண்ட திருமிகு. **அ. பஞ்சநாதன்,** எம். ஏ., பி. லிப்சி., அவர்கட்கும் எனது நன்றி உரித்தாகிறது. இந்நூலை, நன் முறையில் அச்சிட்டுத்தந்த எமது நூலக அச்சகத்தாருக்கும்

எனது நன்றி உரித்தாகிறது. இப்பதிப்புக்குப் பொருளுதவி புரிந்த நடுவண் அரசுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

இதன்கண் உள்ள குற்றம் களைந்து குணங்கொண்டு வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடனாம்.

இந்நூலினைப் பெற்றுப் பயனடைவோர் எல்லாத் துன்பங்களும் நீங்கி, பல நலன்களையும் பெற்று வாழ கற்பனை கடந்த சோதியை வணங்குகின்றேன்.

" பன்னெடுங்காலம் பணிசெய்து பழையோர்
தாம்பலர் ஏம்பலித்(து) இருக்க
உன்னெடுங்கோயில் நெஞ்சுவீற் றிருந்த
எளிமையை என்று(ம்)நான் மறக்கேன் ".

இங்ஙனம்,

**புலவர். வீ. சொக்கலிங்கம்,**
தமிழ்ப் பண்டிதர்,
சரசுவதி மகால் நூல்நிலையம்,

தஞ்சாவூர்,
28—5—83.



உ

# ததீசி புராணம்.

மனித்த ராயினுந் தேவர்க ளாயினும் வணங்க
நினைத்த போதினு மழிவிலா வீடருணிமலன்
பணித்த வாணுத லம்பிகை பரவிட மன்றிற்
குனித்த குஞ்சிதத் தாண்மலர் சென்னிமேற் கொள்வாம். 1

மன்று ளையகன் சரபமாய் மானிட வரியைக்
கொன்று தோல்முகம் புனைந்தமை[1] கூறின மிப்பாற்
றுன்று வண்டலற் றுளபமா லாழியைத் தொலைத்து
வென்றி கொண்டிடு ததீசிதன் மேன்மையை யுரைப்பாம். 2

கைமதக்கரி வாசவன்[2] கடவுளர் முனிவர்
மெய்ம கிழ்ச்சிகொண் டிறைஞ்சிட வீற்றினி திருந்த
மொய்ம துச்சத தளக்கம லத்துநான் முகத்தோன்
றும்ம லிற்குதன் எனவொரு தோன்றல்வந் துதித்தான். 3

அந்(த) வேலையின்[3] வாசவ னயனைமுன் வணங்கி
இந்த வண்டிறற் குதனை நீ யெழு பூவி(ர)க்க[4]
நந்த வச்சிரம் நல்கென நல்கினன் பெற்று
வந்து வா(சவன்) சொற்படி வையகம் புரந்தான். 4

---

1 சரப புராணம். 2 இந்திரன். 3 அப்பொழுது. 4 எழுபுவி புரக்க போதும்.

அறந்த ழைத்திட வகிலங்கள் தழைத்திட வறவோர்
திறந்த ழைத்திட(த் தேவர்)கள் தழைத்திடத் தேவ(ர்)
புறந்த லைக்கெடத் தீவினை தலைக்கெடப் பொருந்தா
மறந்த லைக்கெடக் காசினி புரந்திவன் வாழ்ந்தான். 5

பூத லத்திவன் வாழுநாட் புவிமுதல் பரவு
மாத வப்பெருஞ் சிவமுனி மைந்தனா தலினா
லேத மற்றரு ளரியவ னெனப்பெயர் தரித்தோன்
(பே)த மற்றமெய்த் **ததீ**சிமா முனியெனும் புகழோன். 6

அகிலகா ரணமாகிய சிவன்றிரு வாலய மான
நிகரில் சிந்தையன் புனிதமா தவர்களென் னிலையோர்[1]
புகலொ ணாதபுத் தேளிரைப் புரப்பி(ப்போன்) புரப்போன்
சகல வேதமு நிலையிட வுரையிடத் தக்கோன். 7

இந்த மாதவத் ததீசியு மெய்துமக் குதலுஞ்
சிந்தை நண்புகொண் டுறைந்திடுந் தினத்தி(லோர்) தினத்தி
லந்த மன்னவன் **புவியிலார் முதன்மையென் றறைய**
**முந்து நற்றவர் முதன்மையென் றறிஞனு மொழிந்தான்.** 8

சொன்ன வாசகங் கேட்டலுஞ் சுருதிநான் மறையோ
யென்ன வாசக முரைத்தனை யாவையு முணர்ந்து
மன்ன வாகனன் படைப்பினைப் படைத்தளித் தழிக்கு
மின்ன நீதி(யின் **ம**)**ன்னரே யதிக**மென் றிசைத்து. 9

அந்த வேந்தரிற் றலைமையு மாண்மையு மொய்ம்பு
மிந்தி ராதியர்க் கதிகமு மியா(னுனை மதி)க்கும்
புந்தி மாதவ வா(ற்ற)ற் பெற்றநீ[2] வழக்கென்
றுந்து சீற்றமோ டுரைத்தனன் முனிவனு முருத்து[3]. 10

1 னிலையொன என்றுளது. 2 பொற்றநீ என்றுளது; போற்றநீ எனினுமாம். 3 கோபித்து.

முன்னோர் மாமுனி பிருகுவென் பான்முனிந் தரியைப்
பன்னு மாயிரம் பத்துநீ பிறவெனச் சபித்தா
னின்ன போல்வன வெண்ணில தபோதனர் பெருமை
யென்ன மன்னனுந் ததீசிமாட் (டடாதன வி)சைத்தான். 11

இனைய கூறிய மன்னனை யிடக்கையாற் றலையிற்
புனைம துத்தொடை நெறிந்திடப் புடைத்தன னவனும்
பனைய முந்திய வச்சிரப் படையினால் வெட்ட
முனிவன் வீழ்ந்தனன் வெள்ளியே சரணென மொழிந்து. 12

வணங்கி வீழ்ந்திடு முடற்சுமை வடிவிரு கூறாய்
நிணங்கள் சிந்திடக் குருதிசோ ரநீதத் ததினடுவ
ணுணங்கு மவ்விடைத் தானவர் குருவும்வந் துற்றே
யணங்கு வந்ததின்[1] றரசனால் முனிக்கென வறிந்து. 13

அந்தி வெண்பிறை வேணியோன் றனையகத் துன்னிப்
புந்தி யற்றிடு மியாக்கையை நேர்கொடு பொருத்தி
முந்து மாறுட னெழுப்பினன் முக்கணன் றனக்குத்
தந்த மந்திர "மிருதசஞ் சீவினி[2]" தன்னால். 14

எழுந்த மாதவன் வெள்ளியை யினிதினில் வணங்கி
யிழைந்த மன்னவன் கொடுமையும் பூசலும் விளம்பி
யழுந்த வேயவற் புடைத்துநா னவன்றனை யென்று
மழிந்தி டாமையும்[3] பெறவரு முதவுவா யென்றலும். 15

அன்ன வாசகங் கேட்டலு மவுணர்தங் குருவு
மின்ன லந்தரு "மிருதசஞ் சீவினி" யென்னுந்
துன்னு வித்தையாம் பிகைபரை துணைவனைக் கருதி
முன்ன மேதவம் புரிந்துநான் பெற்றனன் முனிவ! 16

---

1 வநததினரசனலை என்றுளது. 2 மிருக சஞ்சீவினி என்றுளது.
3 மொழிந்ததிடாமையும என்றுளது.

இந்த மந்திரம் வேதயா ந்திர மதனு
னந்து மோமங்கள் தற்பணஞ் செபமிவை நடத்திச்
சிந்தை யுற்றநீ ரிராப்பகல் கொள்ளெனச் செப்பி
முந்து மந்திரங் கொடுத்தனன் பெற்றனன் முனிவன். 17

வெள்ளி தந்திடு மந்திர வித்தையாற் பரனை
யுள்ளி யிம்முறை புரிந்துட லொழிவிலா வரமு
மெள்ள ருந்திறல் வச்சிர காய(மு) மேவருந்
தள்ள ரும்படிப் பெற்றுவந் தரசனைச் சார்ந்து 18

கொந்தி லங்குபைந் தொடைமுடி குலுங்கநின் றுரத்தா
லுந்து சீற்றமோ (டோ)துதா டன்னினு லுதைப்ப
முந்தை நாளென வேந்தன்வச் சிரங்கொடு முனிந்தா
னெந்தை பேரரு ளால்முனி யுடலமிற் றிலதால். 19

வீய்ந்து (நாடிபி)ல்போய் முடிந்திடும் வேதிய னின்று
சார்ந்து வந்தெனை யுதைக்கவும் வாளினுற் றடிந்தா
னேர்ந்தி லாமையு மடைந்தவா றென்னென நினைந்(து)
(வெ)ந்த வாறிவற் கரன்றரும் வரமெனத் தெளிந்து 20

இவனி யற்றிய தவமதன் றேவர மினைய
சிவன ளித்தனன் நாமுமச் சிவனிடை யடைந்து
தவமி யற்றுதல் பழு(தெனர்) சார்ந்துமா யவன்பா
லுவமை யொன்றறத் தவம்புரிந் திடமன னுற்றான். 21

தாண்டு வெம்பரி மாயவன் றனுநல் விரதம்
பூண்டு மாதவன் பொற்பதம் போற்றின னவ்பா
லாண்டு வந்துடனுன்கருத் தியாதென வவனு
மூண்ட பூசலு மாமுனி மொழிந்தது மொழிந்தான். 22

அன்றி யும(வ னெரு)வரா லஞ்சலேனென்று
வென்றி யும்பல வுரைத்த னனவன் றனைவெறற்
கின்று நானுனை வேண்டின னிவ்வர மீவாய்
மன்ற லந்துழாய் மாயவ (வெ)னவெதிர் வணங்க 23

வணங்கு மன்னவன் றன்னைமால் மகிழ்ந்துபார்த் துரைப்பான்
கணங்க ணாயகன் கலைமறை நாயகன் கயிலை
யிணங்கு (நா)யக னிமையவர் நாயக னிமையத்
தணங்கு நாயக னடியவர் பெருமையா ரறிவார். 24

நீச ராயினு மறையவ ராயினு நீங்காப்
பாச ரா(யி)னும் பவத்துவக் களித்திடும் பாச
நாச ராயினு மடியவர் நாசமொன் றில்லாத்
தேச ரசகுவ ரென்றுமுன் செப்பினன் பரமன். 25

ஆத லாலவர் பயமில ரழிவில ரென்றால்
வேத மாதவத் ததீசியை வெல்லுமா றரித[1]
லோதில் வேறதென் னெமைச்சபித் தழிக்கவு[2] முரியோ
னீத வென்செய லென்றனன் மன்னனு மிசைப்பான். 26

விஞ்சு மாற(வ) னுடை ந்திடா னாயினும் வேந்தற்
கஞ்சி னோமவ ரதிகரென் றறையினு மமையு
நெஞ்சி னுள்ளதென் றறைந்திட வப்படி நேர்ந்து
வஞ்ச மா(யவ)ன் சாலை யினமாய்[3] வந்தான். 27

தேவர் தேவனுக் கன்பனே சிவமுனி தவனே
பாவ நாசனே பங்கய முனிவனே நின்பால்
மேவி யோர்வரங் கேட்க(நா)ன் விரும்பின னதனைத்
தாவி லாவகை யருளெனச் சாற்றினன் புகழ்ந்தான். 28

---

1 றரிதா எனல் பொருந்தும். 2 தளிததழிககவுமுரியோ என்றுளது. 3 ?.

சாற்று மாயவன் கருத்தையத் தரிசியு மறியா
நீற்று மேனியான் (றன்னே)ஞ னினைந்துணர்ந் தெம்மைப்
போற்று நாரண வஞ்சமாய்ப் பூசுரர் தமைப்போ
லேற்ற விவ்வடி வெடுத்ததின் றியம்புதுங் கேட்டி. 29

(உன்)னை வேண்டின னருந்தவம் புரிந்தொரு நிருப
னென்னை யஞ்சிடச் செய்வதற் குன்றனை யேவ
வன்ன வாறுகொண் டணைந்தனை யடலுட னுனைப்போற்
(றுன்னு மாயிர) நாரணர் வரினுநான் துளங்கேன். 30

எனைத்த நீசிநின் றுரைத்திட வினிமையாற் பரவி
மனத்தி னஞ்சிலா யென்வரை மாற்றிடா திந்தத்
தினத்தி னஞ்சினை மெ(ன)வுரை செய்கென முனியு
மனர்த்த மொன்றிலா னடியவ ரஞ்சிடுவரோ வென்முன். 31

என்று கூறலு மாயனு முருத்துட னெழுந்து
வென்றி மாத(வர்) வெருக்கொள வீச்சுவ வடிவாய்
நின்று தன்னிடைச் சராசர நிலம்புன லனல்கால்
துன்னு மண்டங்க ளியாவையுந் தோற்றுவித் தனனால். 32

தண்டு குண்டிகை நீர்தனைக் கலைவலான் கையிற்
கொண்டு விண்டுவின் மேலிறைத் தவ்வுருக் குலைத்து
மண்டு மிங்கிது கலையினால் மனுவினால் வல்லோ
ருண்டு (கா)ணினிப் பாரெனப் பார்வையொன் றுதவி. 33

மண்ணு மண்ணிடத் தியாவையு மியாவரு மதிதோய்
விண்ணு மண்டாண் டங்களும் விரிஞ்சன்மால் முதலோர்
கண்ணு நெஞ்சமு மறிந்தமை யன்றியே கலங்க
நண்ணு மேன்மையாற் பலபல காட்டினு னகைத்தான். 34

## வேறு

நின்ற மாயவன் கைபெ(ா)ருது நெஞ்சின் மான மெய்தியே
வென்றி கூறி யிவனை யின்று வெல்ல வேணு நாமெனத்
துன்று **பூசல் கொண்டு** விண்சு டற்ற லத்த னற்பெறுந்
தன்ற டக்கை **யாழி யைத்த நீசி மீதி லேவினன்.** 35

விட்ட வாழி முனிவன் மீது மேவு முன்ன மாயவன்
கொட்ட மான தும்பு றங்கொ டாத மேன்மை யுநிலைப்
பட்ட வாண்மை யும்ப யப்ப டாத வீர முந்திறற்
கெட்டு மாள வந்த **வாழி கெட்டு நீறு பட்டதே!** 36

ஆற்ற லாழி கெட்டல்[1] கண்டு மச்ச மிக்க மாரனைக்
கூற்ற மாகு மென்ன வெண்ணில் கோடி பேர்தன் மேனியிற்
றோற்று மாறு செய்து போர்து டங்கு மென்ன வவர்களு
முற்ற மெய்தி[2] யளவில் பூசல் முனிவ னோடி யற்றினர். 37

அடல்மி குத்தி டுந்த நீசி யரிவை பாக னருளினோர்
பிடித ரு(ப்)பை தன்னை யெவ்வ வைகள் சூல பேதமா
யிடிய திர்த்த தென்ன வந்தெ ழுந்த நார ணக்குழா
முடிவு றத்தொ லைக்க மாய னன்றி யாரு மு(ற்றி)னர். 38

ஈது கண்டு மாயன் வென்னி டாமை கண்டு முனியுமெம்
மாதி தந்த மாய மாயு தங்க ளைம்மை யடருமோ
வேத (நாத ருயு) தங்கள் படைகள் கொண்டு வெய்யபோர்
காது மாறு வல்லை யாதின் வருதி யென்று கழறினர். 39

ஆவ தென்று வாச வா(நீ) யண்ட ரோடு மண்டியே
(தாவி)ல் வாழ்மு சுண்டி தண்டு சத்தி சங்கு தோமர

1 கெட்டது போலும். 2 முற்றுமெய்தி எனினு மமையும்.

மியா வு மாய படைகள் கொண்டெ திர்ந்து நின்ற
திர்ந்துமுன்
றாலி ஞர்க ளெழிலி யாலி சொரிவ தென்ன வெருவவே! 40

வானி றைந்த தேவ ரியாரும் வந்து போர்செய் காலையின்
றேன லர்ந்த கொன்றை திங்கள் சென்னி வைத்த சிவபரன்
றூனு றைந்த சிந்தை மெய்த்த தீசி யால காலமுன்
மேன டந்த டர்ந்த தென்ன வெகுளி யான டந்தனன். 41

நடந்து சென்று மேலை வான நாடர் துன்று பூசலுக்
கிடைந்து போமி னுளு னுளு மென்று சாப மிட்டுமுன்
றுடர்ந்து பற்றி முற்றும் வல்ல சுருதி மாத வத்ினேன்
றுடர்ந்தெ திர்ந்து போர்செய் மாலு ரத்தின் மீது
தைத்தனன். 42

### வேறு

துளவமா லிகையு மணிகவுத் துவமுந்
தொடரறுந் தெங்கணுஞ் சிதறக்
களபமோ டகிலு மணிந்தசெஞ் சாந்துங்
கனன்றுமேற் புகையெழுந் தழிய
வுளமும்வா முயிரு மூசல்தா னுடவுந்
தீயிலி யாவையு முலைய
விளநிலா முடியா னன்பரன் றுதைத்த
(வெ)ல்லையார் சொல்லுவா ரெடுத்தே. 43

நீதகன் றெருளிருஞ் சக்கர மழிந்து
செருவினி லுடைந்தது மன்றி
மாதவ னிடது தாளினு லுதைப்ப
வருந்தி(ய) வருத்தமுங் கண்(டு)

போதல ரகத்தோன் சுடிதுவந் தடைந்த
பூசலை யகற்றின னகன்றான்
பாதபங் கயமத் ததீசியைப் பணிந்து
மாயனும் பாற்கட லடைந்து 44

தருதவ முனியிற் றலைமைசேர் ததீசி
தன்மையும்[1] பெருமையுந் தான்செய்
பெருமையல் லாத சிறுமையு மிதனாற்
பெற்றதென்[2] னெனநினைந் துருகிச்
சுருதிமா தவன்றன் பதம்படு மறுவே
சுத்த(மென்) றெண்ணியம் **மறுவாற்**
**றிருமறு** மார்ப னாகியம் மறுமேற்
றேவியை வைத்துவாழ்ந் தனனே. 45

உன்னருந் தவமுன் புரிந்தருள் மால்முன்
னுற்ற(தை) யறிந்துள நடுங்கி
யன்னமா தவனைப் பணிந்துமுன் னண்ப
னாதலா லடியேன் செய்த
பின்னமாம் பிழையைப் பொறுத்தர னருளான்
பெறுத (லி)யாவை யென்றே
யின்னதீர் வரநீ யருளுதி யென்று
ளிருடியு மவ்வர மீய்ந்து, 46

மாலைவெண் கொடியாய் சிவனடி யார்க்கும்[3]
மற்றுள தேவர்(க்கும்) பயனென்
கோலமா மகுடத் தரசராற் பரவுங்[4]
கொள்கையு மேன்மையு நிலையுஞ்

---

1 தனமையுன என்றுளது. 2 பெறிதென என்றுளது. 3 யாறகும என்றுளது. 4 புரவுங என்றுளது.

சீலமுந் தவமு மியாவரும் பரவுஞ்
செய்கையு முதன்மை(யு மி)யம்புஞ்
சாலவு முடையோ ரவர்களே யென்று
சாற்றிய ததீசியு மகன்றுன். 47

அரியமா தவனு மாலுநேர் பொருத
வத்தல[1] நனேசுர மதனி
லுரியதோர் தீர்த்த மதனையா டினர்சா
யுச்சியம் பெறுவரிக் கதையைப்
பரிவுடன் படித்தோர் கேட்டவர் பயமு
மடைவிலர் நினைத்ததும் பலிக்கு
மிருவினை யறுக்குங் காதையீ தென்று
லாரிதன் பெருமையை யிசைப்பார். 48

ததீசி புராணம் முற்றும்

"ஏற்றுக்
குன்றுளே யிருந்து காட்சி கொடுத்தருள் கோலம் போற்றி!
மன்றுளே மாறி யாடும் மறைச்சிலம்படிகள் போற்றி!!

திருச்சிற்றம்பலம்

1 வததகல என்றுளது.

# வினவிடைப் புராணம்.

(விரியு) மைம்புலன் வீடக் கரணங்க
டிரியும் போதுமென் சிந்தை மறக்குமோ
பரியு நோக்குமை பங்கினன் மன்றுளே
புரியு மாடலும் பூங்கழற் றாள்க(ளும்). 1

(நீ)தி மாதவ(ன்) நேமிபெற் றுய்ந்தமை
யோதி ஞேமினித் தெண்டிரை யுண்டவ
ஞோதி பேரடை யாளம் வினவுறக்
கோதில் வேலவன் மொழிந்தமை கூறுவாம். 2

(நடித்)த பூர(ணர்) காண நடித்திடு
மடித்தலத் தெந்தை யாறு முகத்தனைப்
பிடித்த வன்பிற் பரவிப் பெருங்கடல்
குடித்த மாமுனி கூறலுற் றனரோ.! 3

முன்ன மாதவஞ் செய்த முயற்சியாற்
கன்னி பாகக் கடவுடன் காதைக
ளுன்னை யாதரித் தன்பா லுணர்ந்தன
னின்னும் யான்சில கேட்குவ னெந்தைகேள். 4

(மே)ரு மால்வரை மந்தர வெற்புயர்
தாரு லாவு கயிலைப் பொருப்புள
நீரு லாவு சடைய நிராமயன்[1]
சேரொ ணாத சுடலையிற் சேர்ந்ததேன்? 5

---

1 நிராமையன என்றுளது.

கொ(ன்)றை (மார்)பகங் கோகன காதியா
மன்றன் மாலை யுகப்பின்றி மன்றுளே
நின்ற நாயக னீடலையோ டென்பு
துன்று மாலை விருப்பினிற் சூடலேன்? 6

சாந்து காரகி(ல்) சந்தணங் குங்குமந்
தோய்ந்த நானங் கத்தூரி யிமசலம்
வாய்ந்த வாச வகைவிட்டு மார்பினூ
லார்ந்த நாயகன் பூதி யணிந்ததேன்? 7

அருத்தி யற்றவர் தங்கட் கருத்தியா
மொருத்த னீதென் றுணர்தற் கரியவன்
கருத்தன் காணக் கருத்தரி லாதவன்
திருத்த மாகத் திருநடஞ் செய்ததேன்? 8

வீறு மாக விமானம் புரவிதேர்
சீறு மும்மத வேழஞ் சிவிகைவாட்
டாறு லாஞ்சடை யானெமை யாள்பவ
னேறு பேறு பெறும்படி யேறலேன்? 9

பழுதிற் பீதாம் பரமுத லாகிய
வழகைச் சேருடை யாடை யிருந்திட
வழுவைத் தோலையும் வாளரித் தோலையு
முழுவைத் தோலையும் சாத்தி யுகந்ததேன்? 10

கூனற்[1] சிலைகுந் தயில்தண் (தொடி)வா
(ரான) வச்சிர மாதி யிருந்திட
லூன மற்ற வடிவினி லோர்புற
மானை வைத்தவன் மானைக்கை கொண்டதேன்? 11

வெயில்வி டுஞ்சுடர் வெண்மதி யொன்றொளி
பயிலு நாகப் பணிமணி முத்தினு
லியலும் பீடம தாமென வெம்பிரான்
முயல கன்றன் முதுகி னமர்ந்தேன்? 12

---

1 கூனனற என்றுளது.

ஏதந் தீர்குணம் (போலெ)ழி லெய்திய
வாதி யண்டர்தன் ஞுளா யிருந்திட
வேத நாதன் விகடம தாகிய
பூதம் பேய்படை யாளாய்ப் பொலிதலேன்? 13

தையல் பாகன் றழற்றிரு மேனிய
னைய ஞதி யஞதிய தாயவன்
வெய்ய வீரக் கழல்க ளிருந்திட்
செய்ய தாளிற் சிலம்பை யணிந்ததேன் ? 14

வீசு தெ(ன்றல்) மேவிய பூமுக
வாச மான வகைக ளிருந்திட
விசன் வேதத் திறைவன் கொடுங்கனல்
தேசு லாமலர்ச் செங்கையிற் கொண்டதேன்? 15

மருவு செம்பொன் மதாணிய தாதியாம்
பொருவில் பூணிவை விட்டுப் புராந்தக
னரவு மேனவெண் கோடுவல் லாமையின்
பரவு மோடும் பயிலத் தரித்ததேன் ? 16

(எ)ன்ன காரணங் கொண்டிவை யெம்பிரான்
றுன்னு மாறு படைத்தனன் சொற்றிடி
லுன்னை யன்றி யுடையா ரெவரெனக்
கன்னை யாமென வன்ப(க) மாதலால். 17

துறந்த மாதவர் சிந்தையிற் சோதியாச்
சிறந்த வண்ணல் செயலினை மாலயர்
பிறந்தி றந்துழல் பேதமை யாற்றெளிந்
தறிந்த கூற்று (நன்)மையுண் டாகுமால். 18

ஆத லாற்பிற ரியாரு முணர்வரோ
மாது பாகன் மகிழ்ந்துனக் கோதுவ
னீதெ லாமடை வேயெனக் கின்னதென்
றோது வாயென மாதவ னோதிட 19

தெளிக்கும் வேதத் தெளிவை யான்பெற
விரிக்கு மாறு முகத்தன் விளம்புவான்
பரிக்கு ஞானப் பராபர னியானவை
தரிக்கு முன்னிவை யாவுந் தரித்தனன். 20

இந்த வாசக மறிந்தன[1] மிம்மொழி
முந்தை யீசன் மொழிந்த தெனக்குநீ
சந்த வேதத் தவமுனி யாதலா
லந்த நல்லுரை கேளென் றறைகுவான். 21

## வேறு

எல்லையெனுஞ் சுடலைகேள் சங்காரத்
தண்டங்க ளெல்லா மொன்று
யொல்லையின் மாலய னிமையோர்க[2]
ளுயிர்பொருள்க ளுயிரி லாமைச்
சொல்லிய யாவையும் போய்வெந்
திடலாற் சுடலை யாகு[3]
மல்லணியுங் களனெங்க ளுறைந்தாலுஞ்
சுடலை யாகு மன்(றோ)[4] 22

அங்கமணி செயல்கேட்டி யலைகடலை
யங்கையினி லடக்கி யுண்ட
துங்கநெறித் திருமுனிவ வஞ்ஞான்றத்
தேவர்கடந் தொகுதி (யா)வுஞ்
செங்கனல்வாய்ப் பட்டொன்றாய் வெந்தழியத்
தேவர்கடந் தேவன் றூய்மை
தங்குமெலும் புடன்றலையோ டொப்பிகந்த
மாலையா(ய்த்) தரித்தா னன்றே! 23

---

1 மநதண என்றுளது. 2 னிமையோா முதலோாக என்றுளது.
3 சொலலே பொருளகளியாவையும போய் வெநதிடலா லெங்குஞ் சுடலையாகு என்றுளது. 4 இப்பாடல் சீர்மிக்க பாடல்.

நிலவுதிரு நீற்றியல்பு கேளது
நின்மலமா நீர்மை யாலு
மிலகுதன தடையாளந் தன்னடியார்
(மதி)க்கவெனு மெண்ணத் தாலும்
பலவிதமா யொன்றாகி மன்றாடல்
புரிந்தருளும் பரம னன்னா
ளிலபகி ரண்டமெலாம் வெந்தபெருஞ்
சுடலையினீ றணிந்த(ா ரன்றே)! 24

வெய்யவினை நீறாக்கு முறைமையா
னீறென்றும் விளங்கு பூதி
துய்யநெறி தருகையாற் பூதியென்று
மலவிருளைத் துரத்தி யார்க்கு
முய்யும்வகை விளக்க(லாற் றுளக்க மென்று)
மெழுபவத்தை யொழித்த றன்னாற்
பொய்யினரு ளாக்கையென்று மப்பொடிக்குப்
பெயராகப் புகல லாகும். 25

சிலமுறு நாடகமியாஞ் செப்பவெளி
தோவண்டத் திரள்க ளோடு
மாலையரிந் திராிமையோர் மற்றுளயா
வையும்போய் மடிந்த வன்னாட்
கோலமுறு தனதுசுதந் தரவுண்மை
நினைத்துகளி கூர்த லாலே
நீலநிறக் கண்டத்தா னழியாத
வருளிடமாய் நிருத்தஞ் செய்தான். 26

சடைமவுலிக் குறுமுனிவ விடபமதன்
செயல்கேட்டி சாற்று முன்னைக்
கடையுகத்திற் சங்காரம் புரிந்திடுநாட்
டருமமொருக் காலுந் துஞ்சா
வடைவதனா லத்தருமந் தனைநோக்கி
யருள்செய்வா னமரர்க் காக

விடமருந்தி யவர்க்கமுத மளித்துலக
மளித்தருளும் வேத நாதன். 27

ஆதிவரு கிரதயுக முதலடைவே
யொன்றுமுக்கா லரைகா லாகத்
தீதுபடு மெமையன்றிப் புரிதரும
மெமைக்கூடிச் செய்த தீமை
கோதுபடா தாகையினு லுனக்கிடனு
முனைத்தரித்துக் கொள்வோ நீயு
மேதமற நமைத்தரியென் றத்தருமந்
தனைவிடையா யேறி னுல். 28

இந்தவியல் பாலிறைவன் புரத்தினையன்
றெரித்திடுநா ளிரதம் பூண்ட
சந்தமறைப் பரியிளைத்தல் கண்டுதிரு
மால்தருமந் தாங்கு மென்று
சுந்தரவத் தருமவிடை வடிவெடுத்துத்
தலையினுற் சுமந்தா னின்று
மந்தமுறை கொண்டிறைவன் வாகனமாய்
விடைமீதி லமர்ந்தா னன்றே. 29

வழுவையுரி வந்தவகை மாதவகேள்
காசினியி னேரசுரன் மாய
முழுதுடையோன் மதக்கரியின் வடிவெடுத்து
வானவர்கள் மு(தலா) யாரு
மழுதலற மிகப்பிளிறிக் கொடுமைபுரிந்
தனனவரு மஞ்சி யோடித்
தொழுதுபுகழ்ந் தெமைப்புரப்பா யென்றிறைவன்
றிருமுன்னர் வீழ்ந்தார் தாழ்ந்தார். 30

வந்தவரை யஞ்சலென வாய்மலர்ந்தம்
மதக்கரியை மாய்ப்பா னெண்ணி
யிந்துவிநற் றுளிர்பொன்ற வேயிதனை
யுவந்துருண்ட வெழின்முக் கண்ணுஞ்

சுந்தரவெற் பிருண்டனைய வடிவுமடற்
படைசெறிவெண் டோளுந் தாளுந்
தந்தவர்வச் சிர(ப்படையுங் குந்த)ப்பூணுங்
குலவவொரு வடிவந் தாங்கி 31

அண்டம்வெடிக் கப்பிளிறு மதகரியின்
வரவுதனை யரிவை நோக்கிக்
கொண்டபயங் கண்டஞ்ச லெனநகைத்தக்
கரியதிரக் குறுகிப் பற்றி
யெண்டிகைய உறுப்பனைத்துஞ் சிதறுமற்
செங்கையா லீர்த்துப் பற்றிப்
புண்டரிகற் கரியபிரா னண்டரெல்லாம்
வியப்பவதள் போர்த்தா னன்றே! 32

மடங்கல்தடி செயல்கேட்டி மற்றென்று
லிறவாத வரங்கள் பெற்றுத்
திடங்கிளரு மிரணியனைத் திருவருளா
லரிநார சிங்க மாகி
யடர்ந்தொழித்த தி(ற)லினு லாங்காரந்
தரிப்பரிதா யகில மியாவும்
படர்ந்தழித்த முறைமைதனை வானவர்
ளிறைவன்பாற் பரவிச் சொன்னுர். 33

அங்கதுகேட் டிமையவர்க ளச்சத்தைத்
தவிர்த்திடுவா னழியா வீரத்
துங்கவிறற் சிம்புள்வடி வாயணைந்து
நரசிங்கந் துணுக்க மெய்திப்
பந்தமுறப் பாய்ந்ததனைப் பிடித்துமலர்ச்
செங்கையாற் பதைப்ப வீர்ந்து
பொங்குமத டனையுடுத்து முகந்தலைமா
லையினடுவண் புனைந்தா னன்றே. 34

புலியதழு முழைமானு முயலகனும்
பூதமுமெய்ப் பேயுந் தூய்மை

யிலகுபரி புரமுமொளிர் செங்கனலு
மரவும்வரு மியல்பு தன்னை
மலையமுனி கேள்தாரு வனமுனிவர்
நிலைமைதனை மதிக்க வீசன்
குலவுதவ வேடமுடன் றூர்த்தனென
வொருவடிவங் கொண்டு சென்றான். 35

மெய்த்தவத்தோர் பன்னியர்கண் டளவிறந்த
மால்கொள்ள முனிவர் சீறி
யையன்மிசைச் சாபமிட வடராமை
கண்டுகடு கெண்ணெய் தேங்காய்
நெய்யருக்க மிலைசமித்து முதற்கொடிய
திரவியங்க ணிறைத்துக் குண்டஞ்
செய்தழற்கொண் டதர்வமறை மந்திரத்தா
லவிசாரஞ் செய்த காலை. 36

அவிசாரந் தனிற்பிறந்த புலியைவிட
வதனையுரித் ததனை யார்த்தான்
புவிசாரு மஞ்ஞானர் கேட்டவுடன்
மிருகமாய்ப் போகக் கத்து
நவிசாரச் செவிசாரக் கூப்பிடெனக்
கரந்தரித்தா னலங்கொள் வீரத்
தவிசாரும் படிவிடுத்த முயலகன்மேற்
பாய்ந்தமர்ந்து தயங்கா நின்றான். 37

உந்துசினப் பூதம்பே யுற்றதுவங்
கதுவுடைய படையாய்க் கொண்டான்
மந்திரங்கள் வரச்சிலம்பாய்ப் பதத்தணிந்தா
னெவ்வெதிர வந்த வோமச்
செந்தழலைக் கையேந்தி யதிற்பிறந்த
வரவுவரச் சிரித்து நோக்கிச்
சுந்தரமெய்ப் பணியதென வசைத்துகந்தான்
மலையனருட் டோகை பாகன். 38

ஔர்சுதத்திற் போலும் ஏனக்கோ டோதக்கே ளிரணியன்பின்

ஏனக்கோ டோதக்கே ளிரணியன்பின்
னவனெமக் கண்(ண னென்)போன்
வானத்தோ டமருலகை யழித்தவனி
தனையெடுத்து வரும்பா தாளத்
தானத்திற் புனலிடத்திற் சேமித்தாள்
வானவர்க டளர்ந்து தங்க
ளூனத்தை மான(த்தா) லரிக்குரைப்ப
வவர்கடுய ரொழிப்பா னெண்ணி 39

ஔர்சுதத்திற் சூகரமாம் வடிவெடுத்தவ்
வசுரனுடல் மாய்த்தப் பாரைத்
தளர்வகற்றிக் கொம்பினு லெ(டு)த்தளித்த
வாங்காரம் தரியா னாகி
விளைமதத்தா லுலகெலா மழித்திடவப்
பன்றியுரு வெருவச் சாடி
யிளையமதிக் துளிருரத்தும் புனைந்ததெனப்
பிடுங்கியகோ டிறைவன் பூண்டான். 40

மாமுனிவ கேள்கமட வோடிமையோர்
கடல்கடைந்த மத்த மாய
வேமவரை சாய்ந்திடுநாள் மாயவனோ
ராமைவடி வெடுத்துத் தாங்கிப்
பூமிபுரந் திடுமதத்தாற் பூமியழித்
தாங்காரம் பொருந்து மந்த
வாமைதனை யழித்ததனோ டம்பலவா
ணன்பணியா யணிந்தா னன்றே! 41

இங்கிவைகள் வந்தவகை யிப்படிகாண்
மாமுனிவ விறைவ னிந்த
வங்குமுள வடையாளந் தரித்திருப்பா
னேனென்ன வறைந்தா யாயின்
மங்குவர்கள் யாவர்களுந் தான்மங்கா
னிவன்றலை யுள்ள லென்னத்
துங்கவடி யவர்தெளியச் சுரர்சணம
திறைவனெனத் துளங்க வன்றே. 42

இப்படிப்போ லளவிறந்த திருவிளையாட்
டுடையபிரா னெந்தை யந்த
வொப்பிகந்த விளையாட்டை யாரறிவா
ராருரைப்பா ருரைக்குங் காலைச்
செப்பினம்யா மறிந்தபடி யாவருக்குஞ்
[1]செப்பக்கொள் செறிந்த வன்பு
தப்பறவே சிவன்மீதி லுடையவர்க
ளுளங்களிப்பச் சாற்று வாயால். 43

சிந்தைமகிழ்ந் தன்புடனே யிக்கதையைக்
கேட்டவர்கள் சிவலோ கத்தின்
முந்தியுறைந் திடுவரெனத் தமிழ்மலைய
மாமுனிக்கு மொழிந்தான் வேலே
வெந்தொழியக் கிரிகிழியச் சூரனுடல்
பொடியாக விட்ட வைவேற்
சுந்தனிமை யவர்மடவார் மங்கலநாண்
டனைக்காத்த கருணை யாளன். 44

சிதம்பரபுராண மருளிச்செய்த திருமலைநாயனார்
அருளிச்செய்த சிவபுராணத்தில்

**வினாவிடைப் புராணம் முற்றும்.**

"ஆரூ ரமர்ந்த அரசே போற்றி!
சீரார் திருவை யாறு போற்றி!!"

1 செப்பகொள் என்றுளது.

உ

# பின்னிணைப்பு.

பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணத்து, இந்திரன் பழிதீர்த்த படலத்துக் காணப்படும்

## ததீசி வரலாறு

தொடையகன் மார்பநாந் தூய பாற்கடல்
கடையுநாள் அசுரருஞ் சுரருங் கையில்வெம்
படையொடு மடையன்மின் பழுதென் றப்படை
அடையவுந் ததீசிபா லடைவித் தாமரோ. 25

சேட்படு நாணனி செல்லத் தேவரா
வாட்படை யவுணரா வந்து கேட்டிலர்
ஞாட்படை படையெலா ஞான நோக்கினல்
வேட்படை வென்றவன் விழுங்கி னனரோ. 26

விழுங்கிய படையெலாம் வேற றத்திரண்
டொழுங்கிய தான்முது கந்தண் டொன்றியே
எழுங்கதிர்க் குலிசமா மதனை யெய்துமுன்
வழங்குவன் கருணையோர் வடிவ மாயினன். 27

என்று மாதவ னியம்ப வும்பர்கோன்
ஒன்றும் வானவர் தம்மொ டொல்லெனச்
சென்று மாயையின் செயலை நோன்பினல்
வென்ற மாதவ னிருக்கை மேவினன். 28

அகமலர்ந் தருந்தவ னமரர்க் கன்புகூர்
முகமலர்ந் தின்னுரை முகமன் கூறிநீர்
மிகமெலிந் தெய்தினீர் விளைந்த தியாதது
தகமொழிந் திடலென வலாரி சாற்றுவான். 29

அடிகணீர் மறுததொன் றதனை வேண்டியிம்
முடிகொள்வா னவரொடு முந்தி னேனது
செடிகொள்கா ரிருளுட லவுணர்த் தேய்த்தெமர்
குடியெலாம் புரப்பதோர் கொள்கைத் தாயது. 30

யாதெனி னினையதுன் யாக்கை யுள்ளதென்
றோதலும் யாவையு முணர்ந்த மாதவன்
ஆதலாற் கண்டதா மறையி னானெனப்
போதலர்ந் தின்னன புகல்வ தாயினான். 31

நாய்நம தெனநரி நமதெ னப்பிதா
தாய்நம தெனநமன் றனதெ னப்பிணி
பேய்நம தெனமன மதிக்கும் பெற்றிபோ
லாய்நம தெனப்படும் யாக்கை யாரதே. 32

விடம்பயி லெயிற்றர வுரியும் வீநுழை
குடம்பையுந் தானெனுங் கொள்கைத் தேசொலாம்
நடம்பயில் கூத்தரி னடிக்கு மைவர்வாழ்
உடம்பையும் யானென வுரைக்கற் பாலதோ. 33

நடுத்தயா விலார்தமை நலியத் துன்பநோய்
அடுத்தயா வருந்திரு வடைய யாக்கையைக்
கொடுத்தயா வறம்புகழ் கொள்வ னேயெனின்
எடுத்தயாக் கையின்பய னிதனின் யாவதே. 34

என்றனள் சுரணை மொன்றி யெழுகருத் தறிவை யீர்ப்ப
நின்றனன் பிரம நாடி நெறிகொடு கபாலங் கீண்டு
சென்றனன் விமான மேறிச் சேர்ந்தன னுலகை நோன்பால்
வென்றவன் துறக்கம் புக்கு வீற்றினி திருந்தா னம்மா. 35

அம்முனி வள்ள லீந்த வடுபடை முதுகந் தண்டைத்
தெம்முனை யடுபோர் சாய்க்குந் திறல்கெழு குலிசஞ் செய்து
கம்மியப் புலவ ஞக்கங் கரைந்துகைக் கொடுப்ப வாங்கி
மைம்முகி லூர்தி யேந்தி மின்விடு மழைபோ னின்ருன். 36

## அபிதான சிந்தாமணி கூறும்

## ததீசி முனிவர் வரலாறு

'அதர்வர்' என்னும் இருடிக்குச் 'சாந்தி'யிடம் உதித்த குமாரர் "ததீசி". இவருக்குத் 'தத்யங்கர்' எனவும் பெயருண்டு. இவருக்குக் குதிரை முகம் என்று கூறுவர். மகா விரத ஒழுக்கமுடையவர். 'துவட்டா'விற்கு 'நாராயண கவசம்' உபதேசித்தவர். இந்திரன், விருத்திரன் முதலிய அசுரரை வெல்ல, இவரிடம் வந்து, முன்பு தேவரும், அசுரரும் பாற்கடல் கடைகையில், இரு திறத்தவரும் ஆயுதங்களுடன் வர, அவைகளை விஷ்ணுமூர்த்தி வாங்கி, இம்முனிவரிடத்தில் வைத்தார்.

அந்த ஆயுதங்களை நெடுநாள் வைத்திருந்தும், அவற்றை யாரும் கேளாததால், இவர் அவற்றை விழுங்கினர். அவைகள் திரண்டு, இம்முனிவரது முதுகந்தண்டைச் சேர்ந்திருந்தன. அம்முதுகந்தண்டைக் கேட்க, தமது உயிரை ஒரு பொருட்டாக எண்ணுமல், தனது முதுகெலும்பைக் கொடுத்த கருணைமூர்த்தி.

குபன் என்னும் அரசனை நட்பு பூண்டு, அவன், 'அரசர் பெரியர்' என, இவர், 'அந்தணர் பெரியர்' என வாதிட்டு, அரசனை மோத, அரசன் வச்சிரத்தால் எறிய, உடலறுந்து, சுக்கிரனை நினைக்கச் சுக்கிரன், 'மிருத சஞ்சீவினி' மந்திரத்தால் உயிர்தரப்பெற்றுச் சிவபூசை செய்து வச்சிர யாக்கை பெற்றுக் குபனை முடியிற் உதைத்தனர். இதனல், குபனுக்கு விஷ்ணுமூர்த்தி பரிந்து வந்து, சக்கரத்தையும், அநேக

விஷ்ணுக்களையும் ஏவினர். இருடி அவ்விஷ்ணுவின் மாயைகளைத் தமது கட்டைவிரலில் உதித்த அநேக விஷ்ணுக்களை ஏவி மாற்றிச் சக்கரத்தைப் பின்னிடச் செய்து, பல பாணங்களைத் தருப்பையில் ஆவாகித்துப் பிரயோகித்துப் பிரமன் வேண்டுகோளால் நிறுத்திக் குபனுக்கு அருள்புரிந்தவர்.

தக்கன் செய்த யாகத்திற்குச் சென்று, அவனுக்குச் சிவமூர்த்தியின் சிறப்புக்களைக் கூறிச் சிவமூர்த்திக்கு அவி கொடுக்கப் போதித்தனர். அவன், இவரது சொற்களைக் கேளாததால், செய்யும் யாகம் அழியவும், அந்த யாகத்திற்கு வந்த தேவர்கள் மாளவும், வேதியர் இரு பிறப்பாளராகத் தங்கள் நிலை தவறி, வேறு தெய்வங்களைத் தொழுது முத்தி இழக்கவும் சபித்தவர்

## தீர்த்தகிரிப்புராணம்

ஒருமுறை, முனிவர்கள் வைகுண்டத்தை வாயினால் சிருட்டித்தனர். இதனால் திருமால் கோபித்தனர். இதைக் கண்ட ததீசி முனிவர், தமது உடலெல்லாம் வைகுண்டம் காட்டினார் என்று தீர்த்தகிரிப் புராணம் கூறுகின்றது.

**கந்தபுராணத்தில், 'ததீசிப்படலம், ததீசி யுத்தரப்படலம்' ஆகிய இரண்டு படலங்கள் காணப்படுகின்றன.**

"அன்ன வேலையி லாரிடர் தம்மொடுந்
துன்னி னானொரு தொல்லிறைக் காகவே
முன்ன மாமலர் மூண்டெழ மற்றவன்
தன்னை வென்ற ததீசியென் பானரோ!"

என்று ததீசிப் படலமும்;

"இந்த வண்ணமத் ததீசிமா முனிவர் னியம்பக்
சுந்த மாமலர்க் கடவுள்சேய் நகைசெய்து கானிற்
சிந்து மென்பொடு சிரத்தொகை யணியுமோ தேவர்
வெந்த சாம்பரும் பூசுமோ பரனெனு மேலோன்"

என்று ததீசி யுத்தரப் படலமும் தொடங்குகின்றன.

**ததீசிப் படலத்துள்ள முநற்செய்யுளுக்கு அடிக்குறிப்பாகக் கீழ்க்கண்டவாறு காணப்படுகின்றது :**

ததீசி முனிவரும், 'குபன்' என்னும் அரசனும் நண்பு பொருந்தி வாழுநாளில், ஒருநாள், இருவரும் 'பிராமணரோ அன்றி அரசரோ சிறந்தவர்' என நகையாடிப் பேசும் பொழுது, முனிவர், 'பிரமாணரே சிறந்தவர்' என்று கூற, அரசன் அதனை மறுத்து, 'அரசரே சிறந்தவர்' என்றான்.

அப்பொழுது, முனிவர் கோபித்து, அரசனை அடிக்க, அவன் பொருது வச்சிரப்படையை வீசித் ததீசிமுனிவருடைய சரீரத்தை இருதுணியாக்க; அவர், சுக்கிரனைத் தியானித்துக்கொண்டு நிலத்தில் வீழ்ந்தார். அதனை அறிந்து, வந்த, சுக்கிரன், துணிபட்ட முனிவருடலைப் பொருத்தி எழுப்பி, 'காஞ்சீபுரத்தில், இட்டசித்தி தீர்த்தத்தில் முழுகி, இட்ட சித்தீசரை வழிபடின் வச்சிரயாக்கை பெறுவை' எனக்கூற; அவ்வாறே முனிவர் சென்று, முழுகி, வழிபட்டு. வச்சிர யாக்கை பெற்று, மீண்டுவந்து, இராச சபையில் இருந்த 'குபன்' என்னும் அரசனுடைய சிரத்தில் இடத்தாளால் உதைக்க; உதையுண்ட அரசனுக்காக விட்டுணு ததீசி முனிவரோடு போர்செய்தார். அங்ஙனம் போர் செய்த விட்டுணுவைத் ததீசிமுனிவர் வென்றார்.

## சொக்கப்பப் புலவர் இயற்றிய கும்பகோணப் புராணத்தில்

## ததீசி பற்றிய செய்தி

### 14. சிவயோக விரத முரைத்த வத்தியாயம்

#### மாலவன் மகிழ்ந்திருத்தல்

மிகவும் காடடர்ந்த பகுதி திருக்கேதாரம். அந்நகரத்துள்ள ஆலயத்தில் முனிவர் புடைசூழத் திருமால் வீற்றிருந்தார். அவரை நோக்கி, " நின் இனிய பேச்சினால் யாம்

மகிழ்ந்தோம். சிவலிங்கப் பெருமையு முணர்ந்தோம். சிவயோக விரதத்தை மேற்கொண்டவர் யாவர்? அதன் பயனென்ன? அவற்றை அடியேம் தெளிய உணர்த்த வேண்டும், திருமாலே'' என்று வேண்டினர்.

## அந்தணன் பூசை

இந்நகரத்துப் 'பூதிபூடணன்' என்னும் ஓரந்தணனிருந்தான். அவன் ஞானங்கனிந்த நலங்கொண்டவன். சில காலமாக, நல்லுணர்ச்சி உறக்கமிவையின்றி இருந்தான். இருந்தவனுக்குப் பெரியோர், ''வளர் பிறையில் பதினான்காம் நாள் விதிபாதம், ஆதிரை கூடிய நன்னாளில் சிவார்ச்சனை செய்தால் இவை நீங்கும்'' என்றனர். அங்ஙனமே செய்து, அவை நீங்கப்பெற்றான், அந்தணன்.

## புலைச்சி மகள்

வேத பாரங்க ஞனதால் மேல்வரும் பிறவி நோக்கி வருந்துவானாயினான், ''பன்றி, கழுகு, புழு முதலியனவாகப் பிறக்க நேரிடுமே'' என மனம் நொந்தான். ''இவை வராமல் தடுத்தற்குரிய வழி யொன்றுதான்; அது, இறைவன் வழிபாடுதான்'' என்ற முடிவுக்கு வந்து, அவ்வழிபாட்டை, நன்முறையில் செய்ததன் பயனாக, இறுதியில், எல்லாப் பிறப்பும் கடந்து, புலைச்சி மகளாய்த் தோன்றினான், அந்தணன்.

## புலைச்சி மகள் செய்யும் பூசனை

புலைச்சி மகளாகப் பிறந்தாலும் கழிந்த சன்மவாசனை இருந்தே வந்தது. இறைவழிபாடு தவறாது செய்தல், செய்த பின்னரே உணவருந்தல் முதலியவற்றில் விழிப்பாக இருந்தாள். இறைவனுக்குப் படைப்பது நாயிறைச்சியேயாம். தான் நிவேதிக்கும் நாய்த்தசையைச் சுடலைத்தீமேல் வைப்பது வழக்கம். அவ்வாறே வைத்தபோது, முனிவர் ஒருவர் வரக்கண்டாள். கண்டவள், அவ்விறைச்சியைப்

பிறர் கண்டால், ஈசற்காகாதென வுன்னி, நாய்த்தோலால் மூடினாள். அதனை அம்முனிவர் கண்டார்; வியப்புற்றார். வியப்புற்று, மூடியதற்குக் காரணங்கேட்டார். வந்தவர் 'ததீசி முனிவர்'.

## மூடியதற்குக் காரணங் கூறல்.

இறைவனுக்குப் படைக்கும் பொருள்கள், இறைவனுக்குத் திருவாராதனம் செய்த பின்னர்தான் உட்கொள்ள வேண்டுமென்பது வேதவிதி. அவ்வுணவைச் சைவர் அல்லாப் பிறர் காணப்போகா" தென்றாள். "சைவரல்லாப் பிறர் யாரென்றார்?" முனிவர். 'அதற்கு, அவள், "நான் முகனும் மாலும் தேடியும் காணாத பொருளைத் தேவனென்று செப்பாதவன்; நீறு பூசாதவன்; ஊர்த்வ புண்டரமாகத் திருமண் காப்பணிபவன். மண்ணால் ஊர்த்வ புண்டரந் தரித்திருப்பவன் என்றறியாமல் அவனுக்கு உணவளிப்போன்; அவனை வணங்குபவன்; சிவன்பால் அன்பில்லாதவன்; நாளுஞ் சிவசரிதங் கேட்க முயலாதவன்; சிவனிரவில் அக்கமணியணிந்து சிவ வழிபாட்டிலீடுபடாதவன் ஆகிய இவர்கள் சைவரல்லாதவர்கள். நைவேத்தியப் பொருள்களை, சிவ வழிபாட்டில் ஈடுபாடில்லாதார் கண்டால் கண்ணூறு படுமென்று மூடினேன்" என்றாள்.

"அவர்கள் கண்டால் விலக்க வேண்டுமோ?" என்றார், அதற்கு, அவள், "முந்தை மறைகள் மொழிகின்ற சிவ வழிபாடில்லாதவர்கள், புலையனுக்கொப்பாகுமென்று இகழப்படுவார்கள். ஆதலால் சைவ சீலமில்லாதவர்கள் கண்டால் அகற்றல் கடனாகும்" என்றாள்,

## முனிவர் ஞானக்கண்கொண்டு நோக்குதல்

இவற்றைக்கேட்டு இரும்பூது எய்தினார். "இவைகளை இவளறிந்தபடி எங்ஙனம்?" என ஞானக்கண்ணால் நோக்கினார். நிகழ்ந்தவற்றையெல்லாமுணர்ந்தார். 'சாபாலவுப

நிடதம்' சொல்கின்ற சைவ விதி இவளறிந்தமையால்தான் இவ்வாறு கூறினள். சிவபூசை சேதாரத்தில் இயற்றிய தன்மையால், இவள், பலபிறப்பெடுத்து அனுபவிக்க வேண்டியவற்றை, ஒரே பிறவியிலனுபவித்துத் தீர்த்தாள். ஆதலால், சிவ வழிபாட்டின் பெருமை யாரால் சொல்ல வியலும்'' என உள்ளத் தெண்ணிக் கண்குளிர இனிது நோக்கி, வாழ்த்திப் போனார்.

குறிப்பு: இந்நூல் எமது சரசுவதி மகால் வெளியீடு எண். 132-'கும்பகோணப் புராணம்' என்பதாகும்.

**இனி 11-ம் பாட்டின் தொடர்புடைய, திருமால் பத்து பிறவிகள் எடுக்கச் சபித்த பிருகு முனிவர் பற்றிய செய்திகள் :—**

## பிருகு முனிவர் வரலாறு

### 1. அபிதான சிந்தாமணி கூறுவது :—

பிரமன் மானச புத்திரர்களில் ஒருவர், "பிருகு". மனைவி புலோமசை, மற்றொரு மனைவி கியாதி. இவரது குமாரன் கவி. பேரன் சுக்கிரன். இவர்களன்றி, இவருக்குக் கியாதியால் தாதை, விதாதை என்ற இரண்டு குமாரர்கள் இருந்தனர். அவர்களுள், தாதைக்கு, மிருகண்டும், விதாதைக்குப் பிராணனும் பிறந்தனர். பிராணன் குமாரன் வேதசிரன். வேதசிரன் குமாரன் உசேநஸ். மிருகண்டின் குமாரன் மார்க்கண்டேயன். மற்றொரு குமரன் சௌநகன். இவர் தமது பாரியைக்கு, யக்ஞத்தின் பொருட்டு அக்கினியை உண்டாக்கும்படி கட்டளையிட்டு நீராடச்சென்றார்.

இவள், தனித்திருந்ததை அறிந்த 'புலோமன்' என்னும் அரக்கன், பூரண கருப்பிணியாயிருந்த இருடிபத்தினியாகிய புலோமையைத் தூக்கிக்கொண்டு போயினன். இவளது அபயங்கேட்ட, வயிற்றிலிருந்த 'சியவனன்' வெளிவந்து, அரக்கனை எரித்தனன். இதனை யோகத்தால் அறிந்த

இருடி, அக்கினியை நோக்கி, 'நீ, கண்டும் தடை செய்யாதிருந்தமையால், சுத்த வஸ்த்துக்களையன்றி, அசுத்த வஸ்த்துக்களையும் உண்ணும்படி சபித்தார்.

இவர், ஒரு அரசனுக்கு இரண்டு புத்திரிகளில் மூத்தவளை மணந்து, புத்திரப்பேறு இல்லாது, மனைவி வேண்ட, அவளுக்குச் சோமவாரத்தில் அரசமரத்தைத் தழுவினால் புத்திரப்பேறு உண்டாகுமென, அவள் அவ்வாறு செய்து, புத்திரப்பேறடைந்து, காசிராஜனை மணந்த தன் தங்கை, புத்திரனில்லாதிருப்பதைத் தன் நாயகருக்கு அறிவிக்க, அவர், அவளைப் பலாச மரத்தைத் தழுவக் கட்டளையிட்டுப் புத்திரப்பேறளித்தவர்.

இவருக்கு மற்றொரு குமாரர் சமதக்கினி. ஒருமுறை இவர், சத்துவதேவரை அறியும்படி, பிரமன், உருத்திரன், திருமால் இவர்களிடஞ்சென்று, அவர்களைக் கோபமூட்டினர். அதனால், உருத்திரனும் பிரமனும் கோபித்தனர். இவர் அந்தத் தேவர்கள் இருவரில் உருத்திரனுக்கு இலிங்க மறும்படியும், பிரமனுக்குக் கோயிலில்லாதிருக்கவும் சாபமளித்து, விஷ்ணுவிடம் சென்று, ஒரு உதை கொடுக்க, விஷ்ணு, உதைத்த காலைப்பிடித்து உபசரித்ததால், இவரே சத்தியமூர்த்தியென்று அறிந்து வந்தனர். வீதல்யனுக்கு அடைக்கலந்தந்து, அவனை வேதியனாக்கியவர்.

மனைவியைக் கொன்ற விஷ்ணுவிற்குத் தன் மனைவியை நீங்கவும், பத்துப் பிறவி கொள்ளும்படியும் சாபம் அளித்தவர். இருசிகரும் இவர் குமாரர். இவர் தக்ஷ யாகத்தில், வீரபத்திரரால் மீசை, தாடி முதலியவைகளைக் கொளுத்தப் பெற்றவர்.

இவரை வருணன் சந்ததியார் என்று யசுர் வேதங் கூறும். இவர் பிறந்து, அதிதேஜோ ரூபமாயிருந்ததால் இப்பெயர் பெற்றனர்.

இவர் மனைவி, அசுரர்க்கு அபயங் கொடுத்ததினால் விஷ்ணுவால் கொலை செய்யப்பட்டபின், இவர், விஷ்ணுவைப் பூமியில் பல பிறவியெடுக்கும்படி சபித்துத் தமது தபோபலத்தால், இறந்த மனைவியின் சிரத்தினை உடலுடன் சேர்த்து உயிர்ப்பித்தனர்.

**2. கந்த புராணம் கூறுவது :—** (அடிமுடி தேடு படலம் 32-ம் செய்யுள்.)

" துய்யபாக னார்பிருகு சொற்றசாப தத்தால்
ஐயிரு பிறப்பினை அடிக்கடி யெடுத்தாய்
மெய்யமைவ அனைத்தையும் விதித்தனம் விதித்தெங்
கையது சிவந்துளது கண்டிடுதி யென்றேன் " 32

என்று திருமாலை நோக்கிப் பிரமன் கூறுவது.

**3. மேலும் அபிதான சிந்தாமணியில் 'புலோமன்' என்ற சொல்லுக்கு விளக்கம் கூறியுள்ளதில் காணப்படுவதாவது :—**

1. திதியின் புத்திரனாகிய அசுரன், புலோமன். இவன் விஷ்ணுவிற்குப் பயந்து பிருகுவிடம் அடைக்கலம்புக, விஷ்ணு, அவனைக் கொடுக்கும்படிக் கேட்க, இருடி மறுத்தமையால், விஷ்ணு இருவரையுங் கொன்றனர்.

3. புலோமன் ஒரு அசுரன். இவன் பிருகு பத்தினியாகிய புலோமையைக் கிரகித்துச் சியவனரால் நீறானவன்.

அடுத்ததாகப் புலோமனைப் பற்றித் தமிழ் லெக்சிகன்: 'இந்திரனால் கொல்லப்பட்ட வோர் அசுரன்' என்று கூறுகின்றது.

# ததீசிப் புராணப்பாட்டு முதற்குறிப்பு
## அகராதி


| | | பக்கம் | | | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 1. | அகிலகாரண | 18 | 25. | சாற்றுமாயவன் | 22 |
| 2. | அடல்மிகுந்திடுந் | 23 | 26. | சொன்னவாசகங் | 18 |
| 3. | அந்தவேந்தனிற் | 18 | 27. | தண்டுகுண்டிகை | 22 |
| 4. | அந்த வேலையின் | 17 | 28. | தருதவமுனி | 25 |
| 5. | அந்திவெண்பிறை | 19 | 29. | தாண்டுவெம்பரி | 20 |
| 6. | அரியமாதவ | 26 | 30. | தீதகன்றொளிருந் | 24 |
| 7. | அறந் தழைத்திட | 18 | 31. | தூளவமாலிகை | 24 |
| 8. | அன்றியுமவனொரு | 20 | 32. | தேவர்தேவனுக் | 21 |
| 9. | அன்னவாசகங் | 19 | 33. | நடந்துசென்று | 24 |
| 10. | ஆதலாலவர் | 21 | 34. | நின்ற மாயவன் | 23 |
| 11. | ஆவிதன்று | 23 | 35. | நீசராயினு | 21 |
| 12. | ஆற்றலாழி | 23 | 36. | பூதலத்திவன் | 18 |
| 13. | இந்தமந்திரம் | 20 | 37. | மண்ணுமண்ணிட | 22 |
| 14. | இந்த மாதவத் | 18 | 38. | மணித்தராயினுந் | 17 |
| 15. | இவ்வியற்றிய | 20 | 39. | மன்றுளையகன் | 17 |
| 16. | இணையகூறிய | 19 | 40. | மாலைவெண்கொடி | 25 |
| 17. | ஈதுகண்டு | 23 | 41. | முன்னோர்மாமுனி | 19 |
| 18. | உன்னருந்தவமுன் | 25 | 42. | வணங்கிவீழ்ந்திடு | 19 |
| 19. | உன்னை வேண்டின | 22 | 43. | வணங்குமன்னவன் | 21 |
| 20. | எழுந்த மாதவன் | 19 | 44. | வானிறைந்த | 24 |
| 21. | எனத் ததீசி | 22 | 45. | விஞ்சுமாறவ | 21 |
| 22. | என்று கூறலு | 22 | 46. | விட்டவாழி | 23 |
| 23. | கைமதக்கரி | 17 | 47. | வியந்துநொடியில் | 20 |
| 24. | கொந்திலங்கு | 20 | 48. | வெள்ளி தந்திடு | 20 |

# வினாவிடைப் புராணப்பாட்டு முதற் குறிப்பு அகராதி


| | | பக்கம் | | | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 1. | அங்கதுகேட் | 33 | 23. | தெளிக்கும்வேத | 30 |
| 2. | அங்கமணி | 30 | 24. | தையல்பாகன் | 29 |
| 3. | அண்டம் வெடிக்கப் | 33 | 25. | நடித்த பூரணர் | 29 |
| 4. | அருத்தியற்றவூர் | 28 | 26. | நிலைவுநிரு | 31 |
| 5 | அவிசாரந்தனிற் | 34 | 27. | நீதி மாதவன் | 27 |
| 6. | ஆதலாற்பிற | 29 | 28. | பழுதிற் பீதாம்பர | 28 |
| 7. | ஆதிவருகிரத | 32 | 29. | புலியதழு | 33 |
| 8. | இங்கிவைகள் | 35 | 30. | மடங்கல்தடி | 33 |
| 9. | இந்தவாசக | 30 | 31. | மருவு செம்பொன் | 29 |
| 10. | இந்தவியல் | 32 | 32. | மாமுனிவ கேள் | 35 |
| 11. | இப்படிப்போ | 36 | 33. | முன்ன மாதவஞ் | 27 |
| 12. | எல்லையெனுஞ் | 30 | 34. | மெய்த்தவத்தோர் | 34 |
| 13. | என்ன காரணங் | 29 | 35. | மேருமால்வரை | 27 |
| 14. | ஏதந்தீர்குணம் | 29 | 36. | வந்தவரை | 32 |
| 15. | ஏனக்கோடோத | 35 | 37. | வந்துசின | 34 |
| 16. | கூனற்சிலை | 28 | 38. | வழுவையுரி | 32 |
| 17. | கொன்றைமார்பகங் | 28 | 39. | வளர் கதத்திற் | 35 |
| 18. | சடைமவுலிக் | 31 | 40. | விரியுமைம்புலன் | 27 |
| 19. | சாந்துகாரகில் | 28 | 41. | வீசுதென்றல் | 29 |
| 20. | சிந்தைமகிழ்ந் | 36 | 42. | வீறுமாக | 28 |
| 21. | சிலமுறு | 31 | 43. | வெயில்விடுஞ் சுடர் | 28 |
| 22. | துறந்தமாதவர் | 29 | 44. | வெய்யவினை | 31 |